<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>**O.S.No. 415 /2022**</u>

06.10.2025 வா.சா.1 திரு. பேச்சிமுத்து

<u>சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

<u>**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. தாவா சொத்தின் நான்கு பக்க எல்கைபற்றி பிராது மற்றும் எனது நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளேன். தாவா இடத்தின் அருகே பரணி சங்கரலிங்கம் என்பவரும் சுப்பிரமணியன் என்பவரும் கடை நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். சுப்பிரமணியன் என்பவர் திருநெல்வேலி மாநகராட்சி தட்சை மண்டல முன்னால் சேர்மன் என்றால் சரிதான். தாவா சொத்து சம்பந்தமாக திருநெல்வேலி மாநகராட்சி வழங்கிய எந்த சொத்து வரி ரசீதும் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தின் சொத்து வரி சம்பந்தமாக எந்தவிதமான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.
2. வாசாஆ 5 ஆனது நான் வாடகை செலுத்தியதற்கான ரசீது என குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் பிராதில் தாவா இடத்திற்கு பின்னால் பிரதிவாதியின் இடம் உள்ளதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வாசாஆ.2 ல் வடிவுடையநம்பி என்பவருக்கு தாவா சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என குறிப்பிட படவில்லை என்றால் சரிதான்.
3. வடிவுடையநம்பி என்பவர் மாநகராட்சிக்கு தீர்வை செலுத்தி வந்ததாக பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் ஆனால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 19.08.2022 அன்று தாவா இடம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் அதில் இந்து சமய அறநிலைய துறை சட்டப்படி நான் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு உள்ள இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என அறிவிப்பு

அனுப்பப்பட்ட பின்னர் தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னிடம் நேரடியாக வழக்கறிஞர் மூலம் பிரதிவாதி வந்து காலி செய்ய சொன்ன பின்னர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன். அதன் பின்னர் மேற்படி அறிவிப்பு வந்தது.

4. எனது நிருபண வாக்குமூலத்தில் பிரதிவாதி அறிவிப்பு அனுப்பிய பின்னர் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதியால் என் மீது இந்து அறநிலைய துறை இணை ஆணையரிடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது என்று சொன்னால் சரிதான். தாவா சொத்து பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு முகாந்திரம் இருந்த காரணத்தால் தான் உதவி ஆணையர், இந்து சமய அறநிலைய துறை, திருநெல்வேலி அவர்கள் 1-ம் எதிர்மனுதாரராக இருந்து இணை ஆணையரிடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

5. நான் இந்த வழக்கில் எனக்கு ஆதரவாக பரிகாரம் பெறுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு பின்னால் பிரதிவாதி மடத்திற்கு சொத்தமான தம்புரான் சாமிகள் ஜீவ சமாதி உள்ளது என்றால் சரிதான். 1990 க்கு முன்பாக தாவா சொத்திற்கு பின்னால் உள்ள பிரதிவாதியின் இடத்தில் இருந்து மதுரை மெயின் ரோட்டிற்கு வந்து அடையும் பாதையாக தாவா சொத்து பயன்பட்டு வந்தது என்று சொன்னால் சரியல்ல. நான் 50 ஆண்டுகளாக இருக்கிறேன் அவ்வாறு பயன்படுத்தவில்லை. நான் 50 ஆண்டுகளாக இருப்பதற்கு என்னிடம் ஆவணம் இல்லை என்றால் 1994 ஆம் வருடம் மாநகராட்சி எனது கூட்டு பங்குதாரர் ஆன வடிவு அழகிய நம்பிக்கு வழங்கியது.

6. பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் தபசில் சொத்தானது மாநகராட்சி சொந்தமானது என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் மாநகராட்சியை தரப்பினராக சேர்க்காமல் பரிகாரம் கேட்டுள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வருவாய் துறை

ஆவணத்தின் படி தபசில் சொத்தானது சர்க்கார் புறம்போக்கு என உள்ளது என்று பிராது மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேன் என்றால் மாநகராட்சிக்கு சொந்தமான சர்க்கார் புறம்போக்கு. வருவாய் துறையை இந்த வழக்கில் சேர்க்காமல் எனக்கு பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

7. முத்தப்பா என்ற நபர் தாக்கல் செய்து நீதிப்பேராணை WP. (MD).No. 8228/2020 ன் உத்தரவின் நகலை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி நீதிப்பேராணையில் எனக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்ததால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முத்தப்பா என்பவர் இடம் தாவா சொத்தில் இருந்து எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் வடக்கு தெற்காக 100 அடி துாரத்தில் உள்ளது.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 06.10.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.06 16:28:48 +0530

Principal District Munsif,
Tirunelveli.